MODULE 7

# டிஜிட்டல் செயல் முனைவு

## பதிப்பு

முதற் பதிப்பு மார்ச் 2020

பிரசுரித்தவர்கள்:
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவின் **(NCEASL)**
மைனர்மட்டர்ஸினால் **(MinorMatters)** பிரசுரிக்கப்பட்டது.

வலையமைப்பு: **www.minormatters.org**

நூலாசிரியர்: நாலக்க குணவர்தன

செயல் திட்ட ஒருங்கிணைப்பு:

யாமினி ரவீந்திரன், சட்ட மற்றும் ஆலோசனை இயக்குனர்
ஷலோமி டானியல், சட்ட மற்றும் ஆலோசனை ஒருங்கிணைப்பாளர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு
அக்ீனா பலிகவதன, ஊடக தந்திரோபாய அலுவலகர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு

முகப்புத்தக வடிவமைப்பு: சஞ்சயன் அய்யாதுரை

பக்க ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்பு: சேனல் ஜேசுடியன்

Commons Attribution-ShareAlike 3.0 IGO (CC-BY-SA 3.0 IGO) license
எனும் திறந்த அணுகல் மூலமாக இப்பிரசுரிப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.
http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/

பொறுப்புத் துறப்பு:
இப் பிரசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மற்றும் கருத்து என்பவை பங்களிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியரால் வெளிப்படுத்தபட்டவை.அது இலங்கை தேசிய கிறிஸ்தவ மறு பிரவேச கூட்டணியினுடையதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு இவ்வமைப்பு பொறுப்புக்கூறாது.

# டிஜிட்டல் செயல் முனைவு

செயல் முனைவு (activism) எனப்படுவது ஒருவரோ அல்லது ஒரு குழுவோ பொது நன்னோக்கமொன்றுக்காக அமைதியான முறையில் செயற்படுவது ஆகும்.

இங்கு குறிப்பிடப்படும் பிரச்சினைகள் எனப்படுவது அரசியல், சமூக, சூழல் அல்லது பொதுச் சுகாதாரம் சார்ந்தவையாகவோ அல்லது பாதுகாப்பு சார்ந்தவையாகவோ காணப்படலாம். உண்மையில் இன்றைய கால செயற்பாட்டாளர்களுக்கு தற்போது காணப்படும் விடயங்களில் போதிய திருப்தி காணப்படாத நிலையொன்றும் உள்ளது, எனவேதான் அவர்கள் மாற்றங்களை வேண்டி நிற்கின்றனர். செயற்பாட்டாளர்கள் தாங்கள் வேண்டி நிற்கும் மாற்றங்களுக்காக சமூக மட்டத்திலும், உள்ளூராட்சி நிறுவனங்களுடனும், தேசிய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தையும் வேண்டி நிற்கின்றனர்.

டிஜிட்டல் செயல் முனைவு அல்லது இணைய செயல் முனைவு எனப்படுவது இணையத்தளம் மற்றும் ஏனைய டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி சமூக நன்னோக்கத்துக்காக அச்சமுகத்தை விழிப்புணர்வூட்டல், ஒன்று திரட்டல் மற்றும் செயற்பாடுகளில் முன்னிறுத்தல் போன்ற விடயங்களில் செயற்பாடு காட்டுதலைக் குறிக்கும். இதன் ஏனைய அனைத்து செயற்பாட்டு முனைவுடனும் சேர்ந்து அமைதியாக நெறிமுறை தவறாமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த பாடப்பரப்பில் இலங்கையிலும் ஏனைய சில இடங்களிலும் பயன்பாட்டிலுள்ள பல்வகையான டிஜிட்டல் செயல் முனைவுகள் பற்றிக் கலந்துரையாடப்படும். இளைஞர் குழுக்கள் உட்பட சில சிவில் சமூக குழுக்கள் மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டாளர்கள் போன்றோர்களால் பயன்படுத்தப்படும் பொது மூலோபாயங்களை அடையாளப்படுத்துவதே இதில் எமது நோக்கம் ஆகும்.

ஒரே வகையான எண்ணப்பாட்டைக் கொண்ட குழுக்கள் இணையத்தளத்தினூடாக எவ்வாறு புதிய செயல் முனைவுகளை உருவாகக்குகின்றன என்பதையும் ஆராய்கிறது.

அதேநேரம், ஒரு வெற்றிகரமாக செயல்முனைவு எனப்படுவது ஒன்லைனில் மாத்திரம் இடம்பெறும் ஒன்றல்ல எனபதையும் நாம் உங்களுக்கு விளக்குகிறோம். இதற்கு ஆரோக்கியமான இணைய மற்றும் இணையமற்ற முறைமைகள் தேவைப்படுகிறது.

# முக்கிய சொற்கள்

பரிந்து பேசுதல் **(Advocacy)**: என்பது அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட தனிநபர் அல்லது குழுவொன்றின் செயற்பாடு ஆகும். பொதுக் கொள்கைகள், சட்டம், நடைமுறைகள் அல்லது பாதீடு போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த உண்மை நிலையை விளக்குதல், விவாதங்களை மேற்கொள்ளல், ஊடகங்களைப் பயன்படுத்துதல் அல்லது அதற்கு ஒப்பான விடயங்களினூடாக அரசாங்க மற்றும் பொது ஊழியர்களிடத்தே வேண்டி நிற்பதையும் இத்தகைய செயற்பாடாகக் கொள்ளலாம்.

செயல் முனைவு **(Activism)**: சமூக மற்றும் அரசியல் மாற்றத்துக்காக கொள்கைகள் அல்லது நடைமுறைகளைக் குறிக்கும்.

அரசியல் நோக்குச் செயற்பாடு (ஊடைஉமவளைளைஅ): (ழேவ டிழடனநன லை வாந ீனுகு) இணைய வழிமுறைகளான சமூக ஊடகங்கள் அல்லது மனுக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒரு அரசியல் கட்சியையோ அல்லது ஏதாவதொரு குறிக்கோளுக்காகவோ செயற்படல்.

அரசியல் செயற்பாட்டு ஆதரவு **(Slacktivism)**: பங்குபற்றுபவருக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவகையில் மென்மையான முறையில் ஏதாவதொரு விடயத்துக்காகவோ அல்லது ஒரு பிரச்சினைக்காகவோ செயற்படல். இச்சொல்லானது ளடயஉமநச மற்றும் **activism** ஆகிய இரு சொற்களிலிருந்து உருவானதாகும். இதை சிலர் மிகவும் மெருதுவான எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாத விடயம் என விமர்சனமும் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Source: http://www.ictliteracy.info/

## செயல் முனைவு: இதுவரையுள்ள கதை

செயல்முனைவு எனப்படுவது கிட்டத்தட்ட நாகரீகத்தைப் போலவே பழமையான ஒன்றாகும். மாற்றத்துக்கான தேவையும், ஒன்றிணைந்து செயல்படுவதற்கான முற்போக்கும் ஆண், பெண் இருபாலாரையும் நூற்றாண்டுகளாக ஒன்றிணைத்துள்ளது. இது கிளர்ச்சியை விடவும் மேலானது. இருப்பினும் செயல்முனைவு என்பதன் உலக வரலாற்றை நோக்குமிடத்து அநேகமான செயற்பாட்டாளர்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றை மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்தும் கிரகித்துக்கொண்டும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இதற்குரிய பரிந்துரைகளை தொடர்பாடல்கள், அமைதியான ஊர்வலங்கள், நடைபவனிகள் மற்றும் சில வகையான எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற அமைதியான முறையில் நடைமுறைப்படுத்தியுமிருக்கின்றனர். அடிக்கடி இவ்வகையான செயற்பாட்டாளர்கள் மற்றவர்களுடன் கலந்துரையாடி தங்களையொத்த எண்ணமுடையவர்களுடனும் குழுக்களுடனும் ஒன்றிணைந்து அரசாங்கங்களுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுவர்.

மகாத்மா காந்தியினது வரலாறு (1869-1948) மிகவும் பெறுமதிமிக்க செயற்பாட்டு முனைவுக்கு வரலாற்று ரீதியான சிறந்த எடுத்துக் காட்டாகும். இங்கிலாந்தில் சட்டத்தரணியாக பயிற்றப்பட்ட காந்தி தென்னாபிரிக்காவில் கறுப்பு நிறத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சமூக விரோத செயற்பாடுகளுக்காக அமைதியான முறையில் சாத்வீக போராட்டங்களை ஆரம்பித்து மத மற்றும் பொருளாதார ரீதியான சமூக நீதிக்காகவும் பாடுபட்டார். இதன் பிற்பாடு 1914 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு திரும்பிய காந்தி இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிரான அமைப்பை தலைமை தாங்கி வழிநடாத்தினார்.

காந்தியின் செயற்பாட்டின் அடிப்படையாக அமைந்தவை வன்முறையற்ற விதத்தில் எதிர்ப்பினை வெளிக்காட்டல் (சத்தியாக்கிரகம்) மூலம் சமூக மற்றும் அரசியல் முன்னேற்றத்துக்காக ஒன்றுபடுதல் ஆகும். அவரின் பார்வையில் வன்முறையின்மை என்பது பௌதீக ரீதியான வன்முறைகள் மட்டுமல்ல. சுய ஆட்சி, திவிர ஜனநாயக செயற்பாடு போன்றவற்றின் மூலம் ஒவ்வொருவரும் ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளில் பங்குபற்ற வேண்டும், இதுவே சமூக இருப்புக்கு மிக முக்கியமானதொன்று எனக் கருதப்படுகிறது. தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக காந்தி ஒரு எழுத்தாளராக, ஒரு ஊடகவியலாளராக, ஒரு அமைதியான ஆர்ப்பாட்டக்காரராக மற்றும் ஒரு சிறந்த சொற்பொழிவாளராகவும் செயற்பட்டார். பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் சம்பாசனைகளில் ஈடுபடும்போது அவர் ஒரு போதும் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவில்லை.

சில வருடங்களின் பின், காந்தியை சந்தித்த மார்டின் லூதர் கிங் (1929-1968) அதே நடவடிக்கையை ஆபிரிக்க அமெரிக்க மக்களின் அரசியல் யாப்பு மற்றும் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த உரிமைகளை மீளப்பெறவும் பயன்படுத்தினார்.

இன்றைய கால செயற்பாட்டாளர்கள் மற்றும் உரிமைகளுக்காக போராடுபவர்களுக்கு காந்தியினதும் கிங்கினதும் அரசியல் மூலோபாயங்கள் ஒரு பெறுமதிமிக்க வழிகாட்டல்களை வழங்கலாம். மறைக்கப்பட்ட உண்மையையும் மறுக்கபட்ட நீதியையும் வெளிக்கொண்டுவர அமைதியான முறையில் போராடுவது ஒரு ஆரோக்கியமான விடயம் ஆகும் .

## மகாத்மா காந்தியிடமிருந்து கற்றுக் கொண்டவைகள்

மகாத்மா காந்தி ஐந்து வகையான வன்முறையற்ற வாழ்க்கை முறையில் வாழ்ந்தார்: அவையாவன மதிப்பளித்தல், புரிந்து கொள்ளல், ஏற்றுக்கொள்ளல், புகழ்தல் மற்றும் கருணை காட்டுதல் ஆகியவை ஆகும்.

“எம்மைப் போலவே காந்திக்கும் மனிதர்களிடம் காணப்படும் குறைபாடுகளும் காணப்பட்டன. ஆனாலும் இந்த ஐந்து விடயங்களையும் கடைப்பிடித்து தனது வாழ்வைக் கொண்டு சென்றார்” என அவரது பேரப்பிள்ளையான அருண் காந்தி 2015 ஆம் ஆண்டு தான் எழுதிய புத்தகமான “எனது பாட்டனாரான மகாத்மா காந்தியின் கோபத்தின் பரிசுகளும் ஏனைய கற்றுக் கொண்ட விடயங்களும்” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.




Read more at: https://www.beliefnet.com/inspiration/the-lessons-of-mahatma-gandhi.aspx

## செயல் முனைவும் தொடர்பாடலும்

தொடர்பாடல்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதானது செயல்முனைவுக்கு எப்பொழுதும் மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பிரதிபலனாக அதிகளவாக செயல்முனைச் சாதனங்கள் தற்போது பாவனையில் உள்ளன. சமூக மாற்றத்துக்கான கருத்தாடல்கள் மற்றும் பொது வெளிகளில் இடம்பெறும் பேச்சுக்களின் மூலமாகவே செயல் முனைவு உதயமாகிறது. இதன் விளைவாகவே சமூக மாற்றம் இடம்பெறுகிறது. பிரசுரங்கள், கையேடுகள் போன்றவற்றை அச்சிட்டுப் பிரசுரிக்கும் இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்களின் பின்னர் கருத்தாடல்களும் கொள்கைகளும் மக்களைச் சென்றடைவது மிக எளியதொரு விடயமாக மாறியுள்ளது.

பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் முதல் வானொலி, தொலைக்காட்சி வரையான வித்தியாசமான வெகுஜன ஊடகங்கள் உதயமானதால் செயற்பாட்டாளர்கள் தங்களது கருத்துக்கள் மக்களை சென்றடைவதற்கு இவற்றைப் பயன்படுத்த தொடங்கினர். எவ்வாறாயினும் வெகுஜன ஊடகங்கள் சில அரச நிறுவனங்களாக அல்லது அரச நிர்வாகத்தின் கீழ் (பத்திரிகை ஆசிரியர்களும்) காணப்படுவதானது செயற்பாட்டாளர்கள் இவற்றை அணுகுவதற்கு ஒரு சவாலாக காணப்படுகிறது. இங்கு பிரசுரிக்கப்படும் செய்திகள் எவ்வாறு, எப்படி அமையப் பெற வெண்டும் என்பதும் அவர்களாலேயே முடிவு செய்யப்படுகிறது.

செயற்பாட்டாளர்களின் கையேடுகளுக்கான மிக நாகரீகமான விடயமாக டிஜிட்டல் மற்றும் வெப்தள சாதனங்கள் காணப்படுகின்றன. எந்தவொரு பிரசுரிப்பாளருக்கும் எத்தகைய தடையுமின்றி தான் விரும்பிய விடயங்களை இணையதள உதவியுடன் பிரிசுரிப்பதற்கு ஏதுவாகவும் இது அமைகிறது. இந்த விடயமானது செயற்பாட்டாளர்களுக்கும் மாற்றத்துக்காக உழைப்பவர்களுக்கும் ஒரு வாய்ப்பாக தற்காலத்தில் அமைகிறது.

வெப்தளமென்பது இயற்கையாகவே அமையப் பெற்ற ஒரு சூழலாகும். மேலும் எல்லா செயற்பாட்டாளர்களும் அவற்றை புரிந்து கொள்ள வேண்டும். இதன் அர்த்தம் யாதெனில் பொது விவாதங்கள், விமர்சனங்கள் போன்ற இரு வழிக் கலந்துரையாடல்களிலும் நாம் ஈடுபட வேண்டும் என்பதாகும்.



[1] What Gandhi can teach today's protesters. The Conversation, [2] October [2017]. http://theconversation.com/what-gandhi-can-teach-todays-protesters-[83404]

## இணையவழி செயல்முனைவு

டிஜிட்டல் மற்றும் இணைய வழி செயல்முனைவானது இணையத்தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் சமூக நடவடிக்கைகள், விடயங்களை பரப்புரை செய்தல் மற்றும் சமூகங்களை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களுக்காக செயல்முறைப்படுத்தப்படும் ஒன்றோடொன்று இணைந்த நிலையில் காணப்படும் இரு விடயங்களாகும். சில நேரங்களில் மக்களிடமிருந்து பொது நிதிகளைப் பெற்றுக்கொண்டு பொது விடயங்களில் செலவளிப்பதற்கான தூண்டுகோலாகவும் இது அமைகிறது (உதாரணமாக அனர்த்த நிவாரண வேலைத்திட்டங்கள் போன்றன)

இணையதளங்களின் ஆரம்ப காலகட்டமான 1990 களில், செயற்பாட்டாளர்கள் குறிப்பாக தகவல்களை மக்கள் மயப்படுத்துவதற்காக வித்தியாசமான நடைமுறைகளைப் கையாண்டிருந்தனர்: இணையதளமானது குறைந்த செலவில் முழு உலகையும் அடையும் வகையான வசதியினையும் வழங்கியது (அதன் பின்னர் Blog போன்றன வளரத் தொடங்கின).

2000 ஆண்டு காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் உருவானதன் பின்னர், டிஜிட்டல் செயல்முனைவானது மிகவும் குழப்பநிலையானதொன்றாக மாறியது. மக்களை வித்தியாசமான முறையில் அடையக்கூடிய வகைகளை இது ஏற்படுத்திக் கொடுத்தது- குறிப்பாக பெரும் நிகழ்ச்சித்திட்டங்கள், இணைய வழியிலான மனுக்கள், மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் மெய்நிகர் கலந்துரையாடல்கள் போன்றவற்றை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

சமூகத்தின் சில பாகங்களை அடைந்து கொள்வதற்காக பிரதான ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானவை என்றாலும் இணைய வழி முறைகளிலும் அதிகளவான செயல்முனைவுகள் இடம்பெறுகின்றன.

உலகளாவிய ரீதியில் இடம்பெறும் பிரசித்தி பெற்ற பிரச்சாரங்களான #BlackLivesMatter, #MeToo மற்றும் #ClimateStrike சமூக ஊடகங்களின் மூலமே பிரபல்யமடைந்தன. இருந்தாலும் இவை அனைத்துக்கும் சில பௌதீக ரீதியான நடவடிக்கைகளான வீதி ஊர்வலங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் போன்றன இன்னும் உறுதுணையாக அமைகின்றன.

இவ்வகையான நடவடிக்கைகள் அனைத்திலிருந்தும் நாம் கற்றுக்கொண்ட பாடம் யாதெனில் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் பிரபல்யம், வெற்றியடைய மிகப்பிரதான தூண்டுகோலாக அமைவது ஒன்லைன் மற்றும் ஒன்லைனற்ற இரு முறைகளையும் ஒன்றாக நடைமுறைப்படுத்துவதாகும். அமைதியான முறையில் இடம்பெறும் வீதி ஊர்வலங்கள், நடைபவனி மற்றும் பொது ஒன்று கூடல்கள் போன்றன சமூக ஊடகங்கள் மற்றும் பிரதான ஊடகங்கள் போன்றவற்றுக்கு தேவையான அளவுக்கு புகைப்படங்களை எடுத்து மக்கள் மத்தியில் அவை செய்தியாக பரப்பப்படுவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது.

எவ்வாறிருந்தாலும் சமூக ஊடகப்பாவனைகளுக்கும் சவால்கள் இருக்கத்தான் செய்கிறது - அவற்றை எப்படி மக்களை தொடர்ந்து கவர வைப்பது என்பதானது இதற்கான ஒரு சவால் ஆகும். ஒன்லைன் ஊடகங்கள் மக்களை வேகமாக கவரும் அதேவேளை அதே வேகத்தில் அவர்களது கவனத்தை சிதறடிக்கவும் செய்யலாம். ஒரே நேரத்தில் ஒரு விடயத்தை மட்டும் செய்தியாக தெரிவிப்பதென்பது மிகவும் சாத்தியமற்ற ஒரு விடயம் ஆகவே பல வகையான செய்திகளை முழு நேரத்துக்கும் ஏற்ப வழங்கப்படுகிறது - இவை சில நேரம் இவ்வகையான பல்தரப்பட்ட விடயங்கள் மக்களின் கவனத்தை வேறு வகையில் திசை திருப்பவும் செய்கிறது.

இறுதியாக ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், டிஜிட்டல் செயல்முனைவானது தொழில்நுட்ப பாவனையை விடவும் மேலான ஒன்றாகும். டிஜிட்டல் செயல்முனைவு என்பதன் பொருள் சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைக்கேற்ப தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பிரச்சாரம் ஒன்றுக்காக செயற்படுதல் ஆகும்.

டிஜிட்டல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு – வலையமைப்பு, குறியீடுகள், மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஆரம்ப நிலை என குறிப்பிடலாம். ஆனாலும் இவை நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளுக்கேற்ப மாறுபடக்கூடியவை, எனவே செயற்பாட்டாளர்கள் தாம் எந்தளவு, எவ்வகையான முறையில் தங்களுடைய நடவடிக்கைகளை முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும் - இதன் மூலமே அவர்களின் முழுமையான வெற்றியை அடைந்து கொள்ளலாம். எனவே கள நிலவரங்களை அறிந்து சரியான முறையில் பகுப்பாய்வு செய்து அதன்பால் செயற்படுவது இன்றிமையாததாகும்.



## இணையவழி செயல்முனைவு: அண்மைய உதாரணங்கள்

**#BlackLivesMatter** என்பது ஒரு சர்வதேச நிறுவனமாகும். ஆபிரிக்க – அமெரிக்க மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் அமெரிக்காவில் இடம்பெற்ற கறுப்பு நிற மக்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் இன ரீதியான ஒடுக்குதல்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்குகிறது. 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொலிஸாரின் கொடூரமான நடவடிக்கைகள் மற்றும் பாகுபாடு போன்றவற்றை இல்லாதொழிப்பதற்காக இந்த அமைப்பு தோற்றம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**#ClimateStrike** எனப்படுவது புவி வெப்பமாதலைத் தடுப்பதற்காக பாடசாலை மாணவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாகும். சுவீடன் நாட்டு பாடசாலை மாணவியான **Greta Thunberg** சுவீடன் பாராளுமன்றத்துக்கு வெளியில் 2018 ஆம் ஆண்டு எதிர்ப்பு நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தார். இந்த நடவடிக்கையானது உலகிலுள்ள அனைத்து இளைய சமூகத்தினரையும் கவர்ந்த ஒரு விடயமாக மாறியது.

**#MeToo** எனப்படுவது பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் சேட்டைகளை எதிரப்பதற்காக தோற்றம் பெற்ற உலக அமைப்பாகும். இதன் பின்னர் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் உலகம் பூராகவும் சதுரக் குறியீட்டுடன் பிரபல்யமடைந்தது.

(மேலதிக விபரம் சம்பவக் கற்கை 5 இல் வழங்கப்பட்டுள்ளது)

## இணையவழி செயல்முனைவின் மூலோபாயங்கள்


ஒரு வெற்றிகரமான இணையவழி செயல்முனைவின் மூலம் எதிர்பார்க்கப்படும் பரிந்துரைகளை அடைவதற்கு சில படிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் சில இங்கு உதாரணங்களாக வழங்கப்பட்டுள்ளன.

### HASHTAGS அல்லது சதுரக் குறியீடுகள்

ஒரு குறிப்பிடப்பட்ட விடயத்தை மற்றவர்களும் தொடர்ந்து பின்பற்றி பரப்புரை செய்வதற்காக பயன்படுத்தப்படும் அலகு அடையாள வகைகளில் இதுவும் ஒன்றாகும். Twitter, Instagram, Facebook, Reddit மற்றும் YouTube போன்றவற்றில் இவை மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு ஆரோக்கியமான சதுரக்குறியீட்டுக்கு அவை மிக எளிதாக, ஞாபகமூட்டக்கூடிய, வேறுபட்ட மற்றும் மற்றவர்களை கவரக்கூடிய வகையில் அமையப்பெற்றிருப்பது முக்கியம் ஆகும் (நீங்கள் ஏதாவது சதுரக்குறியீடொன்றை பயன்படுத்த முன்பு அவை ஏற்கனவே வேறு யாராவதால் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை சரிபார்த்து கொள்ளுங்கள்).

இலங்கை என்பதை தெரியப்படுத்துவதற்கான பல சதுரக்குறியீடுகள் ஏற்கனவே பாவனையில் உள்ளன, அவற்றுக்கு உதாரணமாக #lk, #lka, #sl மற்றும் #SriLanka போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதே போன்று கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களின் போது மக்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக #FloodSL, #FloodLK மற்றும் #SLFloods போன்ற சதுரக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட #PresPollSL ஆனது இன்னமும் பயன்பாட்டில் உள்ளது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் அவை பயன்படுத்தப்படலாம். அண்மையில் ஏற்படுத்தப்பட்ட 51 நாள் அரசியல் குழப்பநிலையின் போது (26 ஒக்டோபர் முதல் 16 டிசம்பர் வரை) #CoupLK எனும் குறியீடு பயன்படுத்தப்பட்டன (இதன் அர்த்தம் அதிகார மாற்ற முறை சட்ட ரீதியானதல்ல). அதேபோல #ConstitutionalCrisisLK மற்றும் #PoliticalCrisisLK போன்றனவையும் பயன்படுத்தப்பட்டன.



யாராவது ஒருவர் தனக்கு விரும்பிய சதுரக்குறியீட்டினை உருவாக்கிக் கொள்ளலாம், ஆனாலும் ஒரு சில மாத்திரமே பிரபல்யமடைகிறது. சதுரக்குறியீடுகள் சமூக வலைத்தளங்களில் மிகப்பிரபல்யம் அடைவது போல அவை மற்றைய டிஜிட்டல் சாதனங்களிலும் அதே விடயத்தை தொடர் கதையாக கொண்டு செல்வதற்கு ஏதுவாகவும் அமைகிறது.

## MEMES
அல்லது
அடையாளங்கள்

இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட Memes எனப்படுவது படங்கள், அசையும் உருவங்கள் அல்லது வீடியோக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நகைச்சுவையாக ஒருவரைப் போன்று அப்படியே செய்து காட்டல், சமுதாயத்தில் நடைபெறும் சீர்கேடொன்றை சீர்திருத்தும் நோக்கோடு எழுதுதல் மற்றும் நகைச்சுவையான விடயங்களை பிரதிபலித்தல் போன்றவற்றைக் குறிக்கும். இத்தகையவற்றை உருவாக்கியவர்கள் பற்றிய விடயங்கள் எப்பொழுதும் வெளிப்படுத்தப்படாமலே காணப்படும் அதேவேளை சில அடையாளங்கள் தொடர்ந்து இணையதளங்களில் உலா வந்துகொண்டே இருக்கும்.

Memes கள் கடினமானதாகவும் அழுக்கானதாகவும் இருக்கலாம், அல்லது அதி நவீன கலைப்படைப்புக்களான கிராபிக்ஸ் மூலம் உருவாக்கப்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஒரு விடயத்தை வழமையான முறையில் விளங்கப்படுத்துவதை விட இம்முறையில் விளங்கப்படுத்துவது மிகவும் சாதுரியமானதொன்றாகும்.

இப்படியான Memes கள் பல விடயங்களை எடுத்துக்காட்டுபவைகளாக அமையலாம். பால்நிலை சமத்துவம் முதல் லஞ்ச ஒழிப்பு வரை, நியாயமான தேர்தல் முதல் சூழல் மாற்றவியல் வரையான விடயங்கள் Memes இல் இன்றைய நாட்களில் மிகப் பிரபல்யமான விடயங்களாக மாறியுள்ளது. எது எவ்வாறாயினும் வெற்றிகரமான Memes ஒன்றுக்கு அதன் புதுமைத்தனமும் அது வழங்கப்படும் காலமும் மிகவும் செல்வாக்கு செலுத்துபவைகளாகக் காணப்படுகிறது.

இதற்கு சிறந்த உதாரணமாக இங்கு காட்டப்பட்டுள்ள உள்ளங்கை போன்ற வடிவத்தை "இனவாதத்துக்கு எதிராக நிற்போம்" எனும் பிரச்சாரமானது 2014 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக அளுத்கமையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத நடவடிக்கையினைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும். இதை உருவாக்கியவர்கள் யார் என்று இன்னும் தெரியாத ஒரு நிலை காணப்பட்டாலும், இனவாதத்தை எதிர்க்கும் நற்பிரஜைகள் இந்த விடயத்தை கருத்திலெடுத்து சமூக ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்கத்துக்கு இதனை ஒரு சிறந்த சாதனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.



**ஒன்லைன் மனுக்கள்**

அரசாங்கங்களினாலும் பொது நிறுவனங்களினாலும் பொதுமக்களின் மனுக்களை ஏற்றுக்கொள்ளும் சமூகங்களில் ஒன்லைன் மனுக்கள் ஒரு சிறந்த சாதனமாகக் காணப்படுகிறது.

ஒருவர் ஒன்லைன் மனுப்பகுதியை தரிசித்து தனது கருத்துக்களை பதிவிட வேண்டுமாயின் அவர் தன்னுடைய சில தனிப்பட்ட விடயங்களான பெயர், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை வழங்க வேண்டி நேரிடும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையையுடைய மனுதாரர்களின் கையொப்பங்கள் ஒன்றுதிரட்டப்பட்டதன் பின்னர் குறித்த மனுவானது அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் அல்லது நிறுவனங்கள் போன்ற பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு அது அனுப்பி வைக்கப்படும்

அநேகமான ஒன்லைன் மனுக்களை செயற்படுத்தக்கூடிய இணையதளங்கள் மக்களுக்கு அந்த பகுதிகளுக்கு உள் நுழையவும் புதிய மனுக்களை உருவாக்கவும் வாயப்பு வழங்குகிறது. சில பிரபல்யமான இணையத்தளங்களான change.org, avaaz.org, மற்றும் iPetitions.com போன்றன மனுக்களை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் வாய்ப்பு வசதிகளை வழங்குகிறது. Avaaz 2007 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இலாப நோக்கற்ற ஒரு அமைப்பாகும். இது மனித உரிமைகள், காலநிலை மாற்றம், உயிரினங்களின் உரிமைகள், ஊழல் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் வன்முறை ஒழிப்பு போன்றவற்றுக்காக உழைக்கும் ஒரு அமைப்பாகும்.

**தரவுகளை காட்சிப்படுத்தல்**

செயல்முனைவினை இன்னும் திறம்பட ஒத்துழைப்பானது அவற்றை சரியான முறையில் பகுப்பாய்வு செய்து குறிப்பிட்ட விடயங்கள் பற்றி மக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதாகும். ஆனால் சிலருக்கு சரியான முறையில் எண்ணிக்கைகளை வழங்குவது ஒரு சவால் நிறைந்த விடயமாகவே இன்னும் காணப்படுகிறது.

தகவல்களை காட்சிப்படுத்தல் என்பது தர்க்க ரீதியான ஒரு விடயத்தை அட்டவணை, graph மற்றும் படவிளக்கங்கள் போன்றவற்றுடன் நடப்பு விவகாரங்களை தெளிவாகவும் துல்லியமாகவம் தெரிவிக்கும் ஒரு புலக்காட்சி சம்மந்தமான விடயம் ஆகும். மிகவும் சக்தி வாய்ந்த தகவல் காட்சிப்படுத்தலானது எப்பொழுதும் மக்களை கவரக்கூடிய, பிரச்சார முறையினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தெளிவில்லாத மயக்க நிலையிலுள்ள அறிக்கைகளை தகவல் திரட்டு ஒன்றின் மூலம் மனிதர்களுக்கு வழங்குவதே தரவு காட்சிப்படுத்தலின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த முறையானது சரியாக திட்டமிட்டபடி காணப்படுமிடத்து அந்த தரவுகளின் அர்த்தங்களும் அதனால் மக்களுக்கு முன்வைக்க முனையும் விடயங்களும் சரியான ஒழுங்கில் சென்றடையும் என்பது திடம்.

“ஒன்றில் எமக்கு முழுமையாகவோ அல்லது குறைவாகவோ கிடைத்திருக்கலாம், தகவல்களின் தரத்தில்தான் அதன் விடயம் அமைந்துள்ளது, மற்றும் நாம் அவற்றை மற்றவர்களுடன் தொடர்பாடல் மேறகொள்ளும் முறையில்தான் அதன் வெற்றி அமைந்துள்ளது. செயற்பாட்டாளரான நாம் மற்றவர்களின் அறுபது பக்க அறிக்கைகள் வெளிவரும் வரை காத்திருக்க முடியாது. மற்றவர்களைக் கவர வேண்டுமானால் நாம் அவற்றை சரியான முறையில் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தும் அதேவேளை ஆதாரங்களுடனும் தெரியப்படுத்த வேண்டும். நேரத்துக்கேற்ற, நன்றாக தயார்படுத்தப்பட்ட தகவல்கள் செயல் முனைவுக்கு சிறந்ததொரு சொத்தாகும் ”

VISUALISING INFORMATION FOR ADVOCACY, 2013
BOOK BY TACTICAL TECHNOLOGY COLLECTIVE

## இலங்கையில் டிஜிட்டல் செயல்முனைவு

பல ஆண்டு காலமாக இலங்கையானது அரசியல், சமூக மற்றும் சூழல் சார்ந்த செயல்முனைவில் ஈடுபட்டு வந்திருக்கிறது. கடந்த சில காலமாக இலங்கையிலுள்ள சில சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் போன்றோர் அரசியல் உரிமைகள் மற்றும் சமூக நீதி என்பவற்றை மையப்படுத்தி வெப்தளங்கள், blogs, ஒன்லைன் மனுக்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் ஏனைய டிஜிட்டல் சாதனங்கள் போன்றனவற்றை பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஐக்கிய அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆய்வு நிறுவனமான Freedom House இனது As Freedom on the Net 2018 report on Sri Lanka அறிக்கையின்படி, “இலங்கையில் வலுவான டிஜிட்டல் செய்ற்பாடுகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு வழியை வெப் தளங்கள் வழங்குகின்றன. இதில் அநேகமான பிரச்சாரங்கள் பொருத்தமானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் காணப்படுகிறது. பலர் குறுகிய கால நிகழ்வுகள், அல்லது முடங்கிய அரசியல் செயற்பாடுகளுக்கும் ஆளாகின்றனர், அதன் விளைவாக பல செயற்பாட்டாளர்களுக்கு தாம் எண்ணிய விடயங்கள் மற்றும் நீண்ட கால இருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் இக்குறிப்பிட்ட அறிக்கைக் காலத்தில் (2017-2018) பல சமூக ஊடகங்கள் தமது பிரச்சாரங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகிறது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையில் டிஜிட்டல் செயன்முனைவானது பொதுவாக பகிரப்பட்ட சதுரக்குறியீடுகள் மற்றும் ஏனைய குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றில் சிலவற்றை இங்கு நாம் காணலாம்.

- #IVotedSL எனப்படும் குறியீடு மக்களை பிரதான இரண்டு தேர்தல்களில் பங்குபற்ற உற்சாகப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும். உதாரணமாக ஜனவரி 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2015 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 2018 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது இது சற்று புதுப்பிக்கப்பட்டு #LGPollSL ஆக மாற்றம்பெற்று இலங்கையில் முதற்தடவையாக வாக்காளர்கள் தங்களது புகைப்படங்களை பதிவேற்றம் செய்து பகிரக்கூடிய வகையில் அமைந்தது (அவர்களது விரல் அடையாளத்தைக் காட்டி வாக்களித்ததை உறுதிப்படுத்துவது போன்று).

- 2016 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் (Right to Information Act) ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட போது, இது 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரச்சாரம் ஒன்றினை நினைவு படுத்தியதாக அமைந்தது. அக்காலத்தில் காணப்பட்ட அதிகளவான பிரச்சார நடவடிக்கைகள் இணையதள வழிமுறையற்றதாகக் காணப்பட்டிருந்தாலும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அந்த விடயத்தை மீண்டும் வெளிக்கொண்டு வந்து பிரதான மற்றும் சமூக ஊடகங்களின் உதவியுடன் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் மீண்டும் ஆரம்பித்தனர். அதற்காக பயன்படுத்திய பொதுவான குறியீடாக #RTIsl காணப்பட்டது.

- #DisappearedSL எனும் குறியீட்டை மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகக் குழுக்களும் உபயோகித்து இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு நீதியும் நியாயமும் வேண்டி பிரச்சாரங்கள் மேற்கொள்வதற்குப் பயன்படுத்தினர். சர்வதேச மன்னிப்புச் சபையும் (Amnesty International) #StillNoAnswers எனும் குறியீட்டைப் பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

- இன மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல செயற்பாட்டாளர்கள் இணையதள மற்றும் இணையதளமற்ற முறையிலான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர், மேலும் இதுவே இவ்வகையான செயற்பாடுகளின் முக்கிய நோக்கமும் ஆகும்.

- பொதுப் போக்குவரத்து மற்றும் வேலைத்தளங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் எனும் பிரச்சாரத்துக்காக வழங்கப்படும் தரவுகள் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. இதன் எதிரொலியாக இணையதள மற்றும் இணையதள முறையற்ற பல பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA – United Nations population Fund) தங்களது உள்ளூர் அமைப்புக்களுடன் சேர்ந்து #DoesSheTravelSafe எனும் பிரச்சார நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. 2019 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதி முதல் Oxfam Sri Lanka தமது பங்குதாரர்களுடன் இணைந்து சூழேவழுஒலடீரள மற்றும் #CreateAScene போன்ற சமூக ஊடக விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை ஆரம்பித்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய பிரச்சாரங்களை ஆரம்பித்தது.

டிஜிட்டல் செயல்முனைவில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு விடயங்களும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று குறிப்பிட முடியாது. உதாரணத்துக்கு கூறுமிடத்து, இலங்கையில் அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தத்துக்காக உருவாக்கப்பட்ட #NewConstSL ஆனது அச்சீர்திருத்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக இடையில் கைவிடப்பட்டது.

சில வேளைகளில் டிஜிட்டல் செயல்முனைவுகளானது சில கட்சிகளினது “செயற்பாடுகளை தகர்த்தெறிபவைகளாகவும்” அமையலாம். உதாரணமாக 2017-2018 ஆம் ஆண்டுகளில் ஜனநாயக ஊடகங்களான Groundviews, Vikalpa மற்றும் Maatram போன்றவற்றால் ஆரம்பிக்கபட்ட #Celebrate150years குறியீடானது இலங்கையில் இன்னும் எல்லாவற்றையும் இழந்த நிலையில் காணப்படும் மலை நாட்டு தமிழ் சமுதாயத்தினரது உரிமைகளை ஞாபகமூட்டும் நோக்கிலும் இலங்கையின் தேயிலைத் துறையின் 150 ஆவது ஆண்டினை நினைவுகூருவதற்குமாகவும் உருவாக்கபட்ட குறியீடுகளாகும். (சில நேரம் இவ்வாறு உருவாக்கப்பட்ட குறியீடுகளை அதனை எதிரப்பவர்கள் களவாடி மாற்று வழியிலும் பயன்படுத்தி தமது எதிர்ப்பை வெளிக்காட்டலாம்)

இன்னும் சில உதாரணங்களை கீழே கொடுக்கப்பட்ட சம்பவக் கற்கைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.



## டிஜிட்டல் செயல்முனைவு பற்றிய விமர்சனங்கள்.

டிஜிட்டல் செயல்முனைவு பற்றிய விமர்சனங்கள் உண்மையில் பெறுமதிமிக்கவைகளாகும்.

சமூக ஊடக அரசியல் செயற்பாடுகளானது அடுத்தவர் இடத்தில் தன்னை வைத்துப் பார்ப்பதை விட உணர்ச்சியற்ற ஒரு நிலையை தோற்றுவிக்கிறது. உண்மையான சமூக மாற்றம் என்பது பகிரப்படும் விடயங்களை like அல்லது share பண்ணுவதை விட மேலானது ஆகும். இன்னுமொரு விமர்சனத்தில் குறிப்பிடுகையில் இது ஒரு கிளிக்கில் ஒரு கும்பலை வாடகைக்கு விடுவது போல் “one-click rent-a-mob” அதாவது உண்மையான அரசியல் கலந்துரையாடல்களுக்குப் பதிலாக தவறான தகவல் பரிமாற்றங்கள் மற்றும் துண்டிக்கப்பட்ட உடனடி தொழில்நுட்ப தொடர்பே இதுவாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இன்னுமொரு விமர்சனத்தில் சமூக ஊடகங்களில் கிளிக் செய்வது மிகவும் இலகுவானதொரு காரியமாகக் காணப்பட்டாலும் ஒன்லைனில் இருந்து விலகியிருப்பதுவும் மிகவும் இலகுவான காரியமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் மற்றுமொரு விமர்சனத்தில் குறிப்பிடுகையில் இணைய வாயிலான மனுக்கள் சிக்கலான நெறிமுறைக் கேள்விகளை மேலும் மிகைப்படுத்தி விமர்சனப்படுத்தும் ஒரு விடயம் எனக் குறிப்ப-ிடப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கையில், சமூக ஊடகங்களும் வெப் தளங்களும் செயற்பாட்டாளர்களுக்கான மேலதிக சாதனங்களே தவிர இவை அவற்றோடு மாத்திரம் முடிவுறும் ஒரு விடயமல்ல எனக் குறிப்பிடுகின்றனர். ஆம் இவை முற்று முழுதாக சரியானதொரு சாதனம் அல்ல, ஆனாலும் இவை சரியான முறையில் நெறிமுறை தவறாமல் பயன்படுத்துகையில் அவை முழுமையான பலனை அடையக்கூடியவை ஆகும்.

அமெரிக்காவிலுள்ள சில தரவு பகுப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் நோக்கச் செயற்பாடுகள் தன்னார்வச் செயற்பாடுகளை இரண்டு மடங்காக்கவும், அதே போன்று நன்கொடைகளை இரட்டிப்பாக்கவும், மற்றவர்களை ஊக்குவிப்பதை நான்கு மடங்காகவும் காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரையில் இலங்கையில் மூன்றில் ஒரு பங்கினரே இணையதளத்தைப் பாவிக்கின்றனர். செயல்முனைவானது இணையம் மற்றும் இணையமற்ற இரு முறையிலும் இணைந்து காணப்பட வேண்டும்.

## டிஜிட்டல் செயல்முனைவின் நெறிமுறைகள்.

இணையதள மற்றும் இணையதளமற்ற முறையிலான செயல்முனைவானது பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறைகள் தவறாத வழியில் அமைய வேண்டும். நல்ல நோக்கங்களை மட்டும் கொண்டிருப்பது சந்தேகத்துக்குரிய மற்றும் சுய சேவை நடைமுறைகளை நாடுவதைத் தடுக்கும் என்பதை ஒருபோதும் நியாயப்படுத்தாது.

உதாரணமாக நிறுவனமொன்றினால் பாவனையாளர்களின் மின்னஞ்சல் கணக்குகள் பற்றிய விடயங்களை கையகப்படுத்திக் கொண்டு பின்னர் அவை இலாப நோக்கில் விற்பனை செய்யப்படுவதாக சில இணையவழி நிறுவனங்களுக்கு எதிராக மனுக்கள் கொண்டுவரப்பட்டன. சில இணையவழி நிதி சேகரிக்கும் பிரச்சார நிறுவனங்கள் நிதியினைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு தங்களது நிறுவன முகாமைத்துவ செலவுக்குப் பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள் தங்களது சொந்த அரசியல் கருத்துக்களுக்கும் கட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். ஆனாலும் பொதுமக்கள் நலனுக்காக இவற்றையும் தாண்டி ஒருபடி மேல்நின்று இயங்குவது மிக முக்கியமானதாகும். அரசியல் கட்சிகளோ அல்லது அக்கட்சி சார்ந்தவர்களோ தங்களது சுய தேவைகளுக்காக சமூக செயற்பாடுகளின் மேல் தாக்கம் செலுத்துவதானது ஒரு நெறிமுறை தவறிய விடயமாகும். அதே போன்று பொது விடயங்களுக்கு செயற்படுவதானது சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது வெறுக்கத்தக்க பேச்சுக்களைப் பயன்பத்துவது என்று பொருளாகாது.

"தரநிர்ணயப்படுத்தப்பட்ட ஒழுக்க விழுமியங்களுக்கேற்ப இணையவழி செயல்முனைவுகள் அதன் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். அதன் நோக்கத்தை மறந்து "சமூக ஊடக போருக்கு" முன் நிற்பதானது அதன் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கும் பரிந்துரைகளுக்கு ஒரு சவாலாகும்.

**ETHICS AND SOCIETY BLOG BY FORDHAM UNIVERSITY**

## செயல்முனைவு ஒரு தொடர் செயற்பாடாக

இறுதியாக நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், அதாவது செயற்பாட்டாளர்களின் இலக்குகள் முடிவுறும் ஒரு விடயம் அல்ல: இன்னும் அதிகம் அதிகம் செயற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் அவர்களுக்கு காணப்படுகிறது. செயல்முனைவானது நீண்ட கால நடவடிக்கைகளுக்காக நிலைத்த தன்மையான, உறுதியான மற்றும் திறன் மிக்கவையாகக் காணப்பட வேண்டும்.

மனித உரிமைகள், சமூக நீதி மற்றும் சுற்றுப்புறச் சூழல் போன்றவை நன்கு பிரபல்யமானதென அறியப்பட்ட விடயங்களாக இருப்பதைப் போலவே சில பிரச்சாரங்கள், கொள்கைகள், சட்டங்கள் அல்லது செயற்பாடுகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சுருக்கமாக வரையறுக்கப்பட்ட செயற்பாட்டாளர்களின் கோரிக்கைகள், சர்ச்சைக்குரிய சட்டமொன்றை இடைநிறுத்துதல் அல்லது சர்ச்சைக்குரிய சட்டமொன்றை மீளப்பெறுதல் போன்றவை – புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த நிலக்கரியை நம்பியிருப்பதைப் போன்ற கடினமான சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுப்பதைவிட இலகுவானதாகும்.

இது டிஜிட்டல் செயல்முனைவிற்கும் பொருந்தும் ஒரு விடயமாகும். செயற்பாட்டாளர்களின் வெற்றியை மதிப்பளித்து கொண்டாடும் அதேவேளை, செயற்பாட்டாளர்கள் சமூக. அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் அளவிற்கு ஒருமித்துக் காணப்பட வேண்டும். சில சீர்திருத்தங்களுக்கு பல காலமாக காத்திருக்க வேண்டியும் வரலாம், ஆகவே செயற்பாட்டாளர்கள் இந்த விடயங்கள் பற்றி நன்கு விளங்கி அறிந்து ஒழுக வேண்டும்.

அமெரிக்க எழுத்தாளரான Malcolm Gladwell கருத்துத் தெரிவிக்கையில் “செயல் முனைவானது நிலைமைக்கு சவால் விடும் நிலைமையாகும் - இவை ஆழமாக வேரூன்றி பிரச்சினைகளைத் தாக்கும் - இதயத்தின் மயக்கத்துக்கு அல்ல” எனக் குறிப்பிடுகிறார்.

# சம்பவக் கற்கைகள்

## சம்பவக் கற்கை 01: பிரித்தானிய பேரரசில் அடிமை வியாபாரத்தைத் தடுத்தல்

பழம்பெரும் பிரித்தானிய சமூக ஆர்வலர், தனவந்தர் மற்றும் சமூக நிறுவனமொன்றின் தலைவரான **William Wilberforce (1759 – 1833),** ஆபிரிக்க கறுப்பு இன மக்களை பிரித்தானிய கப்பல்கள் மூலம் அடிமை வியாபர முறையின் அடிப்படையில் கொண்டு வந்து மேற்கிந்தியத் தீவுகளில் விற்கப்பட்டமையை எதிர்த்து நின்றார்.
ஒரு செயற்பாட்டாளரான அவர் முதலில் சமூகத்தில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நன்றாக அவதானித்தார். தனது கண்களினூடாக இம்மக்கள் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டு விற்கப்படுவதை அவதானித்தார். இவற்றை அவதானித்த அவர் சொல்லாலும் எழுத்து மூலமும் இத்தகைய விடயங்களை தரவு, உண்மையின் அடிப்படையில் பிரித்தானியாவுக்கு தெரியப்படுத்தினார். தனது அயராத உழைப்பின் காரணமாக சாதாரண அடிமட்ட மக்கள் முதல் உயரிய மக்கள் வரையான சுமார் 300,000 பேர்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டு அடிமை வியாபரத்தை இல்லாமல் செய்ய மகஜர் ஒன்றினை சமர்ப்பித்தார். இருந்தாலும் இந்த விடயங்கள் சாதாரண பாமர மக்களால் அக்காலத்தில் நன்றாக புரிந்து கொள்ளப்படவில்லை.

முன்னேற்ற கிறிஸ்தவ தலைவர்கள், தேவாலயங்கள் ஊடாக தனது தகவல்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தினர். இதையொரு தனிப்பிரச்சினையாக பாராளுமன்றம் வரையும் கொண்டு சென்றார். பாவனையாளர் எதிர்ப்பு நடவடிக்கையொன்றினை அடிமைத்தனம் மூலம் மக்களைப் பயன்படுத்தும் சீனித் தொழிற்சாலை ஒன்றுக்கு எதிராகவும் மேற்கொண்டார்.

Wilberforce 20 வருட காலமாக இந்தப் பிரச்சாரத்தை தொடர்ந்து சென்றதன் விளைவாக பிரித்தானிய பாராளுமன்றத்தால் ஒழிப்பு மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டு அடிமை வியாபாரம் தடை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வாறு நிறைவேற்றப்பட்ட மசோதா நடைமுறையில் காணப்படுகிறதா என்பதை தொடர்ந்து அவதானித்தும் வந்தார். இதன் பலனாக பிரித்தானிய பேரரசில் அடிமை வியாபாரம் முற்றாக ஒழிக்கப்பட்டதை இவர் அறிந்து கொண்டார்.

2006 ஆம் ஆண்டின் பிரித்தானிய–அமெரிக்க சுயசரிதைத் திரைக்காவியமான Michael Apted இனால் இயக்கப்பட்ட Amazing Grace இல் William Wilberforce இனது வரலாறு சித்தரிக்கப்பட்டது.

200 வருடங்களுக்கு முன்பே William Wilberforce இனால் பயன்படுத்தப்பட்ட மூலோபாயங்கள் இக்காலத்துக்கும் பொருந்துபவையாகவே காணப்படுகிறது.

Read more: https://www.christianitytoday.com/history/people/activists/william-wilberforce.html

## சம்பவக் கற்கை 02: கருமை அழகானதே (DARK IS BEAUTIFUL)

இலங்கை உட்பட தெற்காசியாவின் பல பகுதிகளில் காணப்படும் நம்பிக்கைகளில் ஒன்றுதான் மக்களின் தோலின் அழகு, நிறத்தை அடிப்படையாக வைத்து அவர்களை அழகானவர்கள் என சித்தரிப்பது ஆகும். இந்தியா பிரித்தானியாவின் ஆளுகைக்கு கீழ் இருந்த காலப்பகுதியில் கறுப்பு நிறத்தவர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்னடைந்தவர்களாகக் காணப்பட்டனர். அதே காலணித்துவ கொள்கையான "நிறம்" பிரித்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்பும் சில காலம் தொடர்ந்து காணப்பட்டது.

அழகு நிலை மற்றும் நிறம் போன்ற விடயங்களால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படும் ஒரு கூட்டமாகக் காணப்படுகின்றனர். இந்த நிலைமையானது அழகு சாதன உற்பத்தி நிறுவனங்களுக்கு வெண்மையாக்கும் கிறீம்கள், தோலினை வெண்மையாக்கப்பயன்படுத்தப்படும் இரசாயணங்கள், கதிரியக்க சிகிச்சைகள், மற்றும் சில நரம்பு ஊசிகள் போன்றவற்றின் ஊடாக பல மில்லியன் கணக்கான தொகைகளை வருமானமாகப் பெற வழி வகுத்துள்ளது. இவ்விடயமானது பெண்களுக்கு பல விதமான சுகாதார சீர்கேடுகளையும், நோய்களையும் உருவாக்கும் காரணியாகவும் அமைகிறது.

"கருமை அழகானதே – Dark is Beautiful" எனும் பிரச்சாரமானது 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நிறம் சம்மந்தமான மக்களின் தப்பபிப்பிராயத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது நிறம், வடிவம் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஊடகங்கள் சமூகத்துக்கு கொடுக்கும் தப்பான எண்ணப்பாட்டை களைந்து மில்லியன் கணக்காக மக்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

Women of Worth (WOW) எனும் நிறுவனத்தைச் சேர்ந்த கவிதா இம்மானுவேல் என்பவராலே இந்த விழிப்புணர்வுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொலிவூட் திரையுலக நட்சத்திரமான நந்திதா தாஸ் என்வராலும் இவரது திட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்டது. ஊடக அறிவு, பாடசாலை மட்டமான நிகழ்ச்சித்திட்டங்கள், சுய மதிப்பு போன்ற விடயங்களும் இப்பிரச்சாரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தோலின் நிறம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் பற்றிய அநுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக blog ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. விடயங்களை மக்களிடத்தே கொண்டு செல்வதற்காக சமூக வலைத்தளங்களும் பாவிக்கப்பட்டிருந்தன.

இது ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளில் இந்த விழிப்புணர்வுத்திட்டமானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு அவை பல நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவின் விளம்பர தரநிலைச் சபை இவ்வாறான கறுப்பு தோல்களைக் கொண்ட மக்களை காட்டும் விளம்பரத்தினூடாக வியாபாரத்தை முன்னேற்ற முனையும் விளம்பரங்களைத் தடைசெய்தது. எவ்வாறிருப்பினும் அவ்வாறான சில தயாரிப்புகள் இன்னும் சந்தையில் விற்பனைக்குக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் தற்போது இந்நிலை பற்றி புரிந்து கொண்டிருப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பாகுபாடுகளை நாம் முற்றாக களைந்து புதிய சந்ததியினருக்கு இந்தியாவில் மாத்திரமன்றி முழு உலகிலும் நல்லதொரு சூழலை உருவாக்கலாம் என இம்மானுவேல் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

Read more: http://www.darkisbeautiful.in/
https://thewire.in/business/skin-lightening-industry

## சம்பவக் கற்கை 03: HASHTAG GENERATION

Hashtag Generation எனப்படுவது இளைஞர்களைக் கொண்ட மற்றும் இளைஞர்களுக்கான ஒரு அமைப்பாகும். 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனமானது «இலங்கையில் காணப்படும் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளியை நிரப்பும் நோக்கில் செயற்படும் ஒரு அமைப்பாகும».

சமூக ஊடகங்களின் மூலமே சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என எண்ணும் இந்நிறுவனம் புதுமையான, இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய, இளைஞர்களுக்கு விளங்க கூடிய வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் இணையவழியற்ற பல விடயங்களையும் செயற்படுத்த தொடங்கியது.

Hashtag Generation ஆனது எப்பொழுதும் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் தங்களது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்லும் ஒரு வேறுபட்ட நிறுவனமாகும். படங்கள். வரைபுகள் மூலம் பொதுத் தொடர்பாடல்களை மேற்கொண்டும் வருகிறது. எப்பொழுதும் முன்னணிச் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் இந்நிறுவனம் இளைஞர்களையும் அவர்களது பங்குபற்றுதலையும் எப்போதும் முன்னிறுத்தியே தேசிய விவாதங்கள் போன்ற வேலைத்திட்டங்களைக் கொண்டு செல்கின்றனர். நிலைமாறுகால நீதி, சமூக இணக்கப்பாடு, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (#HerSafeSpace) பாலியல் ரீதியான சிறுபான்மையினர்களது உரிமைகள், பெண்களின் அரசியல் பங்குபற்றுதல்களை ஊக்கப்படுத்தல் (குறிப்பாக பெண்களின் 25% பங்குபற்றுதல் எனும் சட்ட மாற்றத்தின் பிற்பாடான காலத்தில்) போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

Read more: https://www.facebook.com/hashtaggenerationsl/

## சம்பவக் கற்கை 04 : **BAKAMOONO.LK**

வித்தியாசங்களை மதித்தல், சுயமரியாதை போன்ற விடயங்களை மேம்படுத்துவதை நோக்ககாகக் கொண்டு Bakamoono.lk தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அவர்கள் தங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "உறவுகள், பால்நிலை, இனப்பெருக்க சுகாதாரம், HIV போன்ற விடயங்களில் புத்திசாலித்தனமாகவும் விவேகமாக இருத்தலே நாம் யாரென்பதை விளக்கும் விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர்".

The Grassrooted Trust, Positive Hopes Alliance, Lanka Plus, National Union of Seafarers in Sri Lanka (NUSS), National Union of Metal & Migrant Workers in Sri Lanka and volunteers போன்ற நிறுவனங்களின் ஒன்றிணைந்த செயற்பாடாகவே bakamoono.lk செயற்படுகிறது. இலங்கையிலுள்ள பல பாலினத்தவர்கள், சட்ட மற்றும் வைத்திய துறையிலுள்ளவர்களையும் இணைத்தே இந்நிறுவனம் தமது செயற்பாடுகளைக் கொண்டு செல்கிறது.

bakamoono.lk இனது முதலாவது வேலைத்திட்மானது HIV பற்றிய விடயங்களான அவை எவ்வாறு, எந்நேரத்தில், எம்முறையில் பரவுகின்றன போன்ற விடயங்களை பிரஜைகளுக்கு சரியான முறையில் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. பாலியல் மற்றும் உறவு முறைகள் பற்றிய விடயங்களும் உள்ளடக்கபட்டிப்டிருந்தன. இவற்றில் பால்நிலை, இணைய சுரண்டல், வன்முறைகளைத் தடுக்க அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படடும் சேவைகள் போன்றவையும் அடங்கும்.

இலங்கையர் மத்தியில் காணப்படும் கேட்கப்படாத கேள்விகளுக்கு விஞ்ஞான அடிப்படையில் பதிலளிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது இந்நிறுவனம் ஆகும்.

Read more: http://www.bakamoono.lk/en

## சம்பவக் கற்கை 05: **#MeToo**

மிகவும் பிரபல்யமான சமூக ஊடகப் பிரச்சாரத்துக்கு உதாரணமாக "MeToo" விழிப்புணர்வுத் திட்டமானது பாலியல் வன்முறைகள், துன்புறுத்தல்கள் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் பாரிய பங்களிப்பை செலுத்துகிறது. சிறியதொரு சமூகவலைத்தள பதிவானது எவ்வாறு பெரியதொரு விடயமாக மாற்றம்பெற்று சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி உலக விடயமாக மாறியது என்பதை விளக்குவதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

அமெரிக்க நடிகையும், தயாரிப்பாளரும், செயற்பாட்டாளரும், பாடகருமான அலிஸ்ஸா மிலானோ (Alyssa Milano) என்பவர் twitter இல் ஒரு பதிவொன்றை பதிவிட்டிருந்தார். "நீங்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு அல்லது வன்முறைக்குட்படுத்தப்பட்டிருந்தால் எனக்கு தெரியப்படுத்துங்கள்" எனபதே அந்த பதில் ஆகும்.

இதன் பதில்கள் மிகவும் வேகமாக அமைந்தது. 24 மணித்தியாலங்களுக்குள் அவரது பதிவானது ஆயிரக்கணக்கான பதில்களையும் மீள் பதிப்புக்களையும் உருவாக்கியது. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பதிவிட்டனர். இவர் ஒருபோதும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு #MeToo பற்றிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனாலும் மக்கள் இதை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் விதத்தைக் கண்டு அவர் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார்.

இந்த MeToo இயக்கமானது அமெரிக்காவின் செயற்பாட்டாளரான Tarana Burke என்பவரால் 2006 ஆம் ஆண்டு நியூ யோர்க நகரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சமூகத்தில் இடம்பெறும் பாலியல் ரீதியான வன்முறைகளையும் இம்சைகளையும் ஒழிப்பதற்காக MeToo எனும் வசனத்தை இவர் பயன்படுத்தினார். அதன் பிறகு 2017 ஆம் ஆண்டு ஹொலிவூட் தயாரிப்பாளரான Hervey Weinstein என்பவர் இந்த MeToo இனை சதுரக்குறியீட்டினையும் இணைந்து #MeToo என்றமைத்து Milano இனது twitter பதிவுக்கு மேலும் வலுச் சேர்த்தார்.

இலங்கையிலும் கூட MeToo ஆனது பல சமூக ஊடகங்களினால் கவர்ந்தெடுக்கப்பட்டு பல நபர்கள் தங்களது சொந்த அனுபவங்களை இதில் பகிர்ந்து கொள்ள தொடங்கியுள்ளனர்.

(நீங்கள் இலங்கையில் வாழும் ஒரு நபராக இருந்து இவ்வகையான பாலியல் தொல்லைகளுக்கோ அல்லது இம்சைகளுக்கோ ஆளாக்கப்பட்டிருந்து உங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள விரும்பினால் Women In Neeed இனை அவர்களது இணையதளம் மூலமாகவோ அல்லது தொலைபேசி இலக்கமான 0114 718585 இன் ஊடாக தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்).

Read more: https://metoomvmt.org/about/
https://www.vox.com/identities/2018/10/9/17933746/me-too-movement-metoo-brett-kavanaugh-weinstein
https://www.bbc.com/news/world-asia-india-47025662

## கலந்துரையாடல் விடயங்கள்

இந்த விடயங்கள் பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ள பின்வரும் கலந்துரையாடல் விடயங்கள் உங்களுக்குப் பயனளிக்கும்.

- வரலாற்றில் மகாத்மா காந்தி சிறந்த அரசியல் செயற்பாட்டாளராக காணப்பட்டதற்கான காரணங்கள் யாவை? அவரது வன்முறையற்ற அணுகுமுறைகள் மற்றவர்களை குறிப்பாக மார்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றோரை எவ்வாறு கவர்ந்தது, இதற்கான காரணம் என்ன?
- இலங்கையில் இணையதளமற்ற செயல்முனைவு முக்கியமானது என்பதற்கான காரணம் என்ன? சமூக ஊடகங்களில் ஏன் எல்லா வகையான செயல்முனைவுகளும் பரிந்துரைகளும் சாத்தியமாவதில்லை?
- Memes, hashtag மற்றும் இணையவழி மனுக்கள் போன்றவற்றறைத் தவிர வேறேதாவது சாதனங்கள் அல்லது மூலோபாய வழிமுறைகள் டிஜிட்டல் செயல்முனைவில் பயன்படுத்தபடலாமா?
- கடந்த காலங்களில் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்திய டிஜிட்டல் செயல்முனைவுக்கு சில உதாரணங்களைக் குறிப்பிடவும்
- சமூக மாற்றத்துக்காக இணைய வழி மற்றும் இணையவழி அற்ற முறைகளைப் பயன்படுத்தும் சிவில் சமூகக் குழுக்கள் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா?
- நீங்கள் எப்போதாவது இணையவழி மனுக்களில் கையயொப்பம் இட்டுள்ளீர்களா? அவ்வாறாயின்இ அவை பற்றி மேலதிக விடயங்களை உங்களது குழுக்களுடன் கலந்துரையாடவும்.

- செய்பவர் திருப்தியடையும் நிலையைவிட இதனால் ஏற்படுத்தப்படும் விளைவு மிகவும் குறைவானதே- இதுவே டிஜிட்டல் செயல்முனைவுக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனம் ஆகும். இதுவே slacktivism என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் இதனை ஏற்றுக்கொள்கிறீர்களா? கலந்துரையாடவும்.

- மேற்கில் உருவான #MeToo இயக்கமானது உலகம் பூராகவும் பரவத் தொடங்கியது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவை பற்றி கலந்துரையாடி – குற்றமிழைத்தவரது பெயர்களையும் கூட குறிப்பிடுகிறது. #MeToo இந்தியாவில் வேகமாகப் பரவியது, ஆனால் இலங்கையில் அவ்வாறு இல்லை. இலங்கையில் இவ்வாறு வேகமாகப் பரவாததற்கான காரணம் என்னவென நீங்கள் நினைக்கிறீர்கள்?

## கற்றல் பலன்கள்

இந்தப் பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்.

- செயல்முனைவு எனப்படுவது போராட்டத்தை விட மேலானது. சரியான செயற்பாட்டாளர் ஒருவர் விடயத்தை நன்கு அலசி, ஆராய்ந்து, மற்றவர்களிடம் கேட்டறிந்து பல்வேறு முறையில் அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முனைவர்.
- செயல்முனைவின் முக்கிய பாகம் ஆரோக்கியமான பொதுப் பேச்சு ஆகும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக அதிகளவாக செயல்முனைவு முறைமைகள் காணப்படுகின்றன. அச்சிடல், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றன அவற்றில் சில ஆகும்
- டிஜிட்டல் செயல்முனைவு எனப்படுவது இணைய செயல்முனைவு என்றும் கூறப்படுகிறது. இது தொழில்நுட்ப முறையினூடாகவும் இணையதள வாயிலாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்தை ஒன்றுதிரட்டும் முறையாகும்.
- ஏதாவதொரு செயல்முனைவு மிகவும் பயனுள்ளதாக வரவேண்டுமாயின் இதற்கு பல படிமுறைகளும் வழிகளும் உண்டு. அவையாவன Hashtag, memes, மற்றும் சமூக உண்மைகள் போன்றன ஆகும். இதன் விளைவாக உலகளாவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அடிமட்டங்களுக்கும் கொண்டு வரப்பட வேண்டும்.
- இரு முறைத் தகவல் பரிமாற்றங்கள் விழிப்புணர்வுச் செயற்பாட்டுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் மிகவும் முக்கியமானதாகும். எனவே செயற்பாட்டாளர்கள் இவை பற்றிய விடயங்களுடன் ஈடுபடும் மக்களுடனும் சிறந்த உறவு முறைகளைப் பேண வேண்டும்.
- இலங்கையில் சமூக, மனிதாபிமான, மற்றும் அரசியல் ரீதியான பலதரப்பட்ட சீர்திருத்தங்கள் தேவையென டிஜிட்டல் செயல்முனைவுகள் காணப்படுகின்றன. இதில் எல்லா வகையான விடயங்களும் சமமான முறையில் தேவையானதல்ல.

## மேலதிக வாசிப்புகள்

இணையத்தளத்தில் சுதந்திரம் 2018 இலங்கை அறிக்கை
https://freedomhouse.org/report/freedom-net/2018/sri-lanka

சமூக ஊடக காலத்தில் செயல் முனைவு
https://www.pewinternet.org/2018/07/11/activism-in-the-social-media-age/

செயல் முனைவும் சமூக ஊடகங்களும்: ஒரு வழிகாட்டி
https://ourdataourselves.tacticaltech.org/posts/23_guide_social_media/

Digital Activism Decoded: The New Mechanics of Change
https://www.opensocietyfoundations.org/publications/digital-activism-decoded-new-mechanics-change

The man behind Avaaz: Can we change the world, one click at a time? Ricken Patel, a young Canadian, thinks so. 1843 Magazine, May/June 2013.
https://www.1843magazine.com/content/features/robert-butler/man-behind-avaaz

Visualising Information for Advocacy, 2013 book by Tactical Technology Collective
https://visualisingadvocacy.org/

New Tactics in Human Rights website's guide to visualization information
https://www.newtactics.org/conversation/visualizing-information-advocacy

Ethics in Online Activism: False Senses of Social Action or Effective Source of Change?
Fordham University Center for Ethics Education, 2016.
https://ethicsandsociety.org/2016/02/17/ethics-in-online-activism-false-senses-of-social-action-or-effective-source-of-change/

Was Kony 2012 Social Media Activism or Mere Slacktivism?
Media Ethics Initiative
https://mediaethicsinitiative.org/2019/02/27/the-ethics-of-online-activism/